# ஜனவிநோதினி

இல. 10.] அக்டோபர்மீ 1876. [புஸ்த. VII.

## சிம்மளத்தீவிலுள்ள புத்ததேவாலயங்கள்.

இவ்விந்துதேசத்திற்குத் தெற்கே இந்துமகாஸமுத்திரத்திலே சிம்மளமென்று பிரசித்தமான தீவொன்று இருக்கிறதல்லவா? அது காடுகளும் மலைகளும் நதிகளும் தோப்புகளும் நிறைந்து வெகு விநோதக்காட்சியுள்ளது. அந்தத் தீவில் கடலோரமெல்லாம் தென்னஞ்சோலைகள் அநேகமாய்ச் செழித்தடர்ந்திருக்கின்றன. உள்நாட்டில் செல்லச்செல்ல, தென்னஞ்சோலைகள் அருமையாகிப் பனங்காடுகள் விசேஷமாய்க் காணப்படுகின்றன. அந்தத் தீவின் நிலைமையினாலேயே அது வர்த்தகத்திற்கு நன்றாய்ப்பொருந்திய இடமென்று யாவர்க்கும் தெளிவாய்த் தெரிய வருமல்லவா? கிழக்கே சீனாமுதலிய தேசங்களிலிருந்து கடல் மார்க்கமாய் மேல்தேசங்களுக்குப் போகவேண்டியிருந்தாலும், ஐரோப்பாமுதலிய மேல்தேசங்களிலிருந்து கீழ்த்தேசங்களுக்கு வரவேண்டியிருந்தாலும் எல்லாவற்றிற்கும் இது மத்தியஸ்தானமாயிருக்கின்றமையால் அந்தத் தீவைக் கடவுள் வர்த்தகத்திற்கென்றே படைத்திருக்கலாமென்று தோன்றுகிறது.

இப்படி மேன்மைபெற்று விளங்காநின்ற சிம்மளத்தீவிலே புத்ததேவாலயங்கள் அநேகமிருக்கின்றன. அவை மிகவும் மேம்பாடாய் அமைத்துக்கட்டப்பட்டவைகள். அந்தத் தீவில் புகுந்தமாத்திரத்திலே இது பௌத்ததேசமென்று நமக்கு நன்றாய்ப் புலப்படும். அத்தேசத்துக் குடித்தொகை இருபத்தினான்கரைலக்ஷத்துள், ஹிந்துக்களுள் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் என்று வழங்குகிற நான்கு வகுப்புகளில், வைசியசூத்திரர்களாகிய ஹிந்துக்கள் நாலரைலக்ஷமும், மஹம்மதியர்முதலிய மிலேச்சர்கள் இரண்டுலக்ஷமும், கிறிஸ்தவர்கள் இரண்டரைலக்ஷமும் ஆக ஒன்பது லக்ஷம்போக மற்றப் பதினைந்தரைலக்ஷமும் பௌத்தர்களென்றால், அத்தேசம் பௌத்ததேசமென்று சொல்லச் சந்தேகமுண்டோ? அங்கே பௌ

த்த சன்னியாசிகள் காவித்துணிபோர்த்துத் திரிந்துகொண்டிருக்க நாமெங்கும் காணலாம். அங்கே பௌத்தமடங்கள் அநேகமுண்டு; அவைகளில் பௌத்தமதசம்பந்தமான பல மதக்கிரந்தங்களும், நிகண்டுமுதலிய பற்பல நூல்களும் விசேஷமாய் அகப்படும்.

சிம்மளத்தீவிலாகட்டும், பர்மாவிலாகட்டும், திபெத்திலாகட்டும், இன்னும் எந்தத்தேசத்திலாகட்டும் பௌத்தர்கள், தாங்கள் குடியேறுகிறவிடமெல்லாம் தடாகந்தோப்புமுதலியவைகளால் செழித்தவிடங்களாய்ப்பார்த்து, அங்கங்கே மேம்பாடான கட்டடவேலைப்பாடுகள் அமைத்து தேவாலயப்பிரதிஷ்டைசெய்வதில், தங்களுக்கு விசேஷாபிமானமுண்டென்பதை நன்றாய்க் காட்டியிருக்கிறார்கள். இப்படிப் பலதேசங்களிலும் பலவாய்ப் பரவியிருக்கின்ற புத்த தேவாலயங்களின் சீர்மை நமதுதேசத்தார் அனைவர்க்கும் நன்றாய்ப் புலப்படும்படி ஒரு ஆலயப்படத்தை இச்சஞ்சிகையுடன் சேர்த்து அனுப்பியிருக்கிறோம். இது சிம்மளத்தீவிலுள்ள புத்ததேவன் கோயில்களிலொன்று.

## தொழில்துறைகளில் உண்மைதவறாமை.

உண்மை பேசுவது மிகவும் எளிது. அப்படியிருக்க, ஜனங்கள் பொய் உரைப்பது என்னகாரணத்தினாலோ தெரியவில்லை. உண்மையை மறைப்பது எளிதல்ல; பொய்சொன்னபின்பு உண்மை பேசியிருந்தால் நல்லது என்று யாவருக்கும் தோன்றும். பொய்பேசுகிறவர்களுக்கெல்லாம் இவ்வாறு தோன்றுவது வழக்கம். வியாபாரத்தில் உண்மையையே பேசவேண்டும். உண்மையின்றி வியாபாரம் நிறைவேறாது. வியாபாரத்தில் பொய்சொல்லுவதற்கு யாதொரு காரணமும் இல்லை. பொய்சொல்லுகிற வியாபாரிகள் பிரயோஜனம் ஒன்றும் அடைகிறதில்லை. அவர்களிடத்தில் ஜனங்களும் அடிக்கடி சாக்குவாங்கமாட்டார்கள். ஒரு கடைக்காரன் உண்மையான விலைசொல்லுகிறதில்லையென்று தெரிந்தால் அவனிடத்தில் ஒருவரும் நம்பிக்கைவைக்கமாட்டார்கள். சாமான்களுக்குத் தப்பிதமான விலைகூறித்திருப்பதாகத் தெரிந்தால் அவற்றை வாங்குகிறவர்கள் சரியான சாமானை வாங்கினதாகத் திருப்தியடையமாட்டார்கள். கொடுத்தவிலை சரியானதோ அல்லவோ என்கிற சந்தேகம் இருந்துகொண்டேயிருக்கும்.

வியாபாரிகளுக்கு இருக்கவேண்டிய குணங்களில் உண்மை உரைப்பது மிகவும் விசேஷமானது. உண்மையேபேசுகிற வியா

பாரியை யாவரும் நன்குமதிப்பார்கள். அவன் சொல்லுவதை யெல்லாம் உண்மையென்று நம்புவார்கள். அவனிடத்தில் உண்மையிருப்பதாகத் தெரிந்தபோது ஜனங்களெல்லாரும் அவனிடத்திலேயே சாமான் வாங்குவார்கள். அவனை எக்காலத்திலும் கைவிடார்கள்.

வியாபாரிகள் தங்கள் கடைக்கு வருகிறவர்களை எள்ளளவும் மோசம்செய்யக்கூடாது. உண்மைபேசுவதால் சரக்கு விலை ஆகாமற்போனாலும் போகட்டும், உண்மையைக் கைவிடக்கூடாது. என்னவந்தாலும் உண்மையையே பேசவேண்டும். உண்மை உரைப்பதால் நஷ்டம் உண்டாகுமென்று தோன்றினபோதிலும் இறுதியில் நஷ்டம் உண்டாகாது. நன்மைசெய்யில் நன்மையே விளையும். வியாபாரியினிடத்தில் நம்பிக்கையிருந்தால் அவன் சொல்லுகிற விலைகொடுத்துச் சாமான் வாங்குவார்கள். அவன் எந்தச் சாமான் நல்லதென்று எடுத்துக்கொடுக்கிறானோ அதையே அவன் சொல்லுகிற விலைகொடுத்து வாங்குவார்கள். ஆகையால் உண்மை உரைப்பதால் நஷ்டமுண்டாகாதென்று நிச்சயமாக நம்பி வியாபாரம்செய்யவேண்டும். வியாபாரி தான் எப்படி வாங்குவதற்கு இஷ்டப்படுவானோ அவ்வாறு விற்கவேண்டும். நேராக உண்மை சொல்லாமல் வீணான சாக்குப்போக்குச் சொல்லுவது நியாயமல்ல. அப்படிச் சொன்னால் பொய்சொல்லுவதாக யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளுவார்கள். ஒரு துணியையெடுத்து அது சாயம் நிற்குமா, உடைதாளுமா என்று ஒருவர் கேட்டால், வியாபாரி ஆம், இல்லையென்று சொல்லவேண்டுமே அல்லது வேறுவிதமாக உண்மையை மறைத்துப்பேசக்கூடாது. உண்மைபேசினால் பயமில்லை.

தமக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் உண்மைபேசுவது யாவருக்கும் எளிது. நமக்கு, நஷ்டம் உண்டாகிறதாயிருக்கும் போது உண்மைபேசுவதுதான் அரிது. உண்மைபேசவேண்டும் என்கிற உறுதி இருந்தால் அந்த உறுதியை முடிப்பது பிரயாசையல்ல. ஆயினும் இவ்வாறு நடப்பது அருமையே. சரக்கு விலையாகவேண்டுமென்று மோசம்செய்கிற வர்த்தகர்கள் அநேகருண்டு. அவர்கள் மரியாதையுள்ள வியாபாரிகளாயிருந்தபோதிலும் இவ்விஷயத்தில் தவறிப்போகிறார்கள். அவர்கள் வெளிப்படையாகப் பொய்சொல்லுவதில்லை. ஒரு சரக்கை மற்றொன்று என்று எடுத்துக்காட்டுவதுமில்லை. ஆயினும் வாங்குகிறவர்களுக்கு உண்மை நன்றாகத்தெரியும்படி அவர்களுக்குச் சொல்லாமல் சில சமயத்தில் வாய்மூடிக்கொள்ளுவார்கள். இது பொய்யுரைப்பதற்குச் சமானந்தான். சிலர் மற்ற வியாபாரிகளைப்போல தாமும் நடக்கவேண்டுமென்றும், தங்களிடத்தில் வேலையாட்கள் அதிகமாயிருக்கவேண்டுமென்றும், அதினால், பார்க்கிறவர்கள் அவர்களுடைய கடையில்

வியாபாரம் மிகுதியாக நடக்கிறதென்று நினைக்கவேண்டும் என்றும் மற்றவர்களைப்பார்த்துப் பொய்சொல்லிக் கெட்டுப்போகிறார்கள். பொய்சொல்லித் திரண்டபணம் சம்பாதித்தபோதிலும் மனதுக்குச் சந்தோஷமுண்டாகாது. எப்போதும் மனோவிசாரம் இருந்துகொண்டு இருக்கும். ஒவ்வொருவரும் உண்மைபேசுவதோடுகூட பிறர்சொல்லுவதும் உண்மையென்று நம்பவேண்டும். விபரீதமான சந்தேகத்துக்கு இடம்கொடுக்கக்கூடாது.

உண்மையை ஒளித்துப் பொய்சொல்லுவதில் எள்ளளவுகூட பிரயோஜனம் இல்லையென்று நிச்சயமாக நம்புங்கள். தேவபக்தி உள்ளவர்கள் பொய்சொல்லத்துணிவது மிகவும் ஆச்சரியமாகத் தோன்றுகின்றது. பொய்சொல்லுவதினால் மனோதைரியம் கெட்டுப்போகும்.

வியாபாரிகள் தங்கள் சரக்கு விலையாகும்பொருட்டு பிரகடன பத்திரங்களைப் பதிப்பிக்கிறார்கள். அதில் செலவாகிற பணத்துக்குக் கணக்கில்லை. நாம் வாங்குகிற சாமான்கள் சரியானதென்று சொல்லுவதற்குக் கூடாது. நாம் நினைக்கிறதொன்று, விலைக்கு வாங்குகிறதொன்று. பிரகடன பத்திரங்களில் சொல்லியிருக்கிற பொய் இவ்வளவென்று நிதானிக்கமுடியாது. அதைப்பார்க்கிறவர்களெல்லாரும் ஏமாரத்தகுந்தவர்களென்று எண்ணித்தான் பிரகடன பத்திரத்தை அச்சிடுகிறார்கள். நாம் விசாரித்துப்பார்த்தாலொழிய அதை நிறுத்துகிறது அரிது. வியாபாரிகள் பெரும்பாலும் இவ்வாறு மோசம்செய்கிறார்கள். சிலர் உண்மைசொல்லி நடந்துவந்தபோதிலும் ஜனங்கள் அவர்கள் நாணயமான வர்த்தகர்களென்று தெரிந்துகொள்ளுகிறதில்லை. பன்றிக்கு முத்தின் அருமை தெரியாது. இதனால் உண்மை உரைக்கும் வியாபாரிகளுக்கு மனவருத்தம் உண்டாகும்.

சரக்குகள் அவைகளைச் செய்திருக்கிற சாமான்களாலும் நிறத்தினாலும் பலத்தினாலும் வேலைத்திறத்தினாலும் விலைமதிக்கப்படுகின்றன, ஜனங்களுக்கு இன்னசரக்கு இன்னவிலையென்றும் இது உயர்ந்தது இது தாழ்ந்ததென்றும் தெரியாது. வெண்கலப்பாத்திரங்களும் பித்தளைப்பாத்திரங்களும் நிறுத்து விற்கப்படுகின்றன. எடை அதிகமானால் விலையும் அதிகமாயிருக்கும். இது சிலருக்குத் தெரியாது. அவர்கள் அந்தப் பாத்திரங்களை வாங்கும்போது கடைக்காரன் பளுவான பாத்திரத்தை எடுத்துக்காட்டினால் அது வேண்டாம், இலேசானதாக ஒன்றையெடு என்று சொல்லுவார்கள். கெட்டிசாயமான சீட்டியைத் தகுந்த விலைகொடுத்து வாங்குகிறதில்லை, விலை சகாயமாயிருக்கிறதென்று சாயம்போகிற சீட்டியை வாங்குவார்கள். சாயம்போய்விட்டால் சீட்டி ஒரு காசுகூடப்பெறாதென்றும், அதிக விலைபோட்டுவாங்கினாலல்லது சாயம்நிற்காதென்றும்

# ஒரு கொல்லன்பிள்ளை கதை.

(தொடர்ச்சி.)

கல்வியில் திறமடையவேண்டுமென்று எண்ணம்கொண்டு பாரடே என்பவன் எப்பொழுதும் முயன்றுவந்தான். அவனும் அவனுடைய சிநேகிதரும் வாரத்திற்கொருதரம் ஒரு இடத்திற்சேர்ந்து வாசித்துப் பழகிவந்தார்கள். இதனால் தெரியாதவற்றைத் தெரிந்துகொள்ளவும், பிசகுகளைத் திருத்திக்கொள்ளவும் ஏதுவாயிற்று. இவ்வாறு அநேகவருஷகாலம் பாரடே வாசித்துவந்தான். அவனும் அவனுடைய சிநேகரும் இதனால் பெற்றபயன் மிகவும் விசேஷமாயிருந்தது.

பாரடே என்பவன் டேவி என்னும் பெயர்பெற்ற சாஸ்திரியாருக்கு உதவியாக வேலைசெய்துகொண்டிருக்கும்காலத்தில் அவர் ஐரோப்பாகண்டத்தில் பிரயாணம்செய்து அதைச் சுற்றிப்பார்க்கவேண்டுமென்று விருப்பம்கொண்டு அதற்குப் பிரயத்தினம் செய்தார். பிராஞ்சுதேசாதிபதியாகிய நப்போலியன் சக்கிரவர்த்தியிடத்திலிருந்து அத்தேசத்துக்குள் பிரவேசித்துப் பிரயாணம் செய்வதற்கு உத்திரவுபெற்றுக்கொண்டார். லண்டன் பட்டணத்தைவிட்டுப் புறப்படும்போது பாரடே என்பவனைத் தன்னோடுகூட அழைத்துக்கொண்டுபோனார். ஒன்றரைவருஷகாலம் பிராஞ்சு, இதலிமுதலான தேசங்களிற்போய் அத்தேசங்களிலுள்ள பற்பல அதிசயங்களைப் பார்த்துத் திரும்பி இங்கிலாந்துக்கு வந்துசேர்ந்தார்கள்.

பிரயாண ஆரம்பமுதல் கடைசிவரைக்கும் நடந்த விசேஷங்களையும் பார்த்த அதிசயங்களையும் அனுதினம் பாரடே தன் புத்தகத்தில் எழுதிவந்தான். அப்புத்தகத்தை வாசித்தால் பற்பல புது சங்கதிகளையும் விநோதங்களையும் அறியலாம். இந்த ஒன்றரை வருஷத்துப் பிரயாணத்தினால் பாரடே என்பவன் அடைந்த பயன் இவ்வளவென்று சொல்லுதல் கூடாது. பெரிய சாஸ்திர பாடசாலையில் வாசித்துவருகிற மாணாக்கர்கள் பெறுகிற பெரும் பயனைப் பாரடே என்பவன் தன் பிரயாணத்தினால் பெற்றான். அவன் ஒன்றரைவருஷம் படித்த பாடசாலை ஐரோப்பாக்கண்டம். அவனுக்குக் கல்விகற்றுக்கொடுத்த வாத்திமார்கள் டேவி என்பவரும், அவருடைய சிநேகிதராகிய அநேக சாஸ்திரியார்களும். பிராஞ்சுதேசத்திற்குப் போனபோது அங்கே அநேக வித்துவான்கள் பாரடே என்பவனுக்குப் பழக்கமானார்கள். ஆகையினாலேதான் அவன் பின்னிட்டுப் பாரிசுபட்டணத்திலுள்ள வித்வசங்கத்தைச்சேர்ந்த சாஸ்திரியாக நியமிக்கப்பட்டான். அதுவன்றி

அவன் தன் புத்தகங்களைப் பதிப்பித்தபோது அவற்றை வெளித் தேசத்தார்கள் அதிகமாய் வாங்கிப் படித்தார்கள்.

சிலநாளானபின்பு பாரடே என்பவனுக்குச் சம்பளம் உயர்ந் தது. முன்னிருந்த சங்கத்திலேயே இன்னும் வேலைபார்த்துவந் தான். டேவி என்பவர் அக்காலத்தில் விசேஷமான ஒரு முய ற்சி செய்துவந்தார். இங்கிலாந்து தேசத்தில் பூமியில் சுரங்கம் வெட்டி நிலக்கரியெடுப்பது வழக்கம். சுரங்கம் ஆழமாயும் இரு ண்டுமிருந்தால் வெளிச்சத்துக்காக ஒரு விளக்கைக் கொண்டு போய் வைப்பதுண்டு. சிலசமயத்தில் விளக்கிலிருந்து விழுகிற பொறி நிலக்கரியின்மேல் விழும். அப்போது உடனே சுரங்கம் வெடித்து வேலைக்காரர் யாவரும் ஒன்றாய் மடிந்துபோவார்கள். இப்படி அநேகசேதம் உண்டாய்க்கொண்டிருந்தது. இதைத் தடுக் கும்பொருட்டு டேவி என்பவர் அனற்பொறி வெளியிலே வராத ஒருவிதமான விளக்கைச் செய்துமுடித்தார். இதனால் அநே கம்பேர் உயிர்தப்பினார்கள். இந்த விளக்கைச் செய்யும்போது பார டே என்பவன் தனக்கு மிக்க உதவியாயிருந்ததாக அப்போது எழுதிய புத்தகம் ஒன்றில் சொல்லியிருக்கிறார்.

இதுவரைக்கும் பாரடே என்பவன் கற்றுவந்தான். தான் கற்றதையெல்லாம் பிறருக்குப் போதிக்கும் காலம் இப்போது நேரிட்டது. பதார்த்தத்தின் இலக்ஷணத்தைப்பற்றி 1816-ம் வருஷத்தில் பாரடே பிரசங்கம் செய்தான். இது அதிக விசேஷ மானதாக இராவிடினும் பின்னிட்டு அவன்செய்த பிரசங்கத்துக் கெல்லாம் ஒரு ஆதாரமாக இருந்தது. சங்கத்தில் வேலைசெய்த காலம்போக மற்றக்காலமெல்லாம் தன் சொந்தமான சாத்திர பரீ க்ஷைசெய்துவந்தான். தினம்தோறும் காலையில் இருப்புவண்டியில் ஏறித் தானே தள்ளிக்கொண்டுபோவான். சாவகாசமாயிருக்கும் போது புள்ளாங்குழல் எடுத்து வாசிப்பான். வாரத்துக்கொருதரம் அவனும் இன்னும் சிலரும் சேர்ந்து சங்கீதம் பழகிவந்தார்கள். சுதியும் லயையும் தப்பாமல் பாடுகிறதற்குக் கற்றுக்கொண்டான்.

சாத்திரப்பயிற்சிக்காக நாளாவட்டத்தில் சில சங்கங்கள் உண் டாயின. அவைகளிலெல்லாம் பாரடேசேர்ந்து பிரசங்கம்செய்து பெரிய சாஸ்திரியென்று பெயரெடுத்தான். தான் இருந்த சங்கத்தி லும் பின்னிட்டுப் பெரிய வேலைகிடைத்தது. அதுமுதல் வாரத் தில் ஒருநாள் சாயந்திரம் தன்னுடைய சிநேகிதரை அழைத்து வந்து தான் செய்த பரீக்ஷைகளைக் காண்பித்து அவற்றால் தெரியவந்த புதிய சங்கதிகளையும் அவர்களுக்குப் போதிப்பான். இவ்வாறு சில காலம் நடந்துவரும்போது வேறு சாஸ்திரங்களும் தான்பிரசங்கம் செய்ய உத்தரவுபெற்றுக்கொண்டு பிரசங்கம்செய்துவந்தான். பின்னிட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை சாயந்தரமும் பிரசங் கம் நடக்கவேண்டுமென்றும், அதைக்கேட்க விருப்பமுடையவர்

கள் யாவரும் வந்து கேட்கலாமென்றும் ஏற்பாடுசெய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டினால் சாத்திர உண்மைகளை ஜனங்களெல்லாம் எளிதில் கற்றுணர்ந்து தங்களுடைய அஞ்ஞானத்தைப் போக்குவதற்கு ஒருவழி உண்டாயிற்று. ஒவ்வொரு பிரசங்கத்திலும் நடக்கிற விசேஷத்தைப் பாரடே தன் புத்தகத்தில் தெளிவாய் எழுதிவைத்துவந்தான்.

1827-ம் வருஷத்தில் அவன் அநேக பிரசங்கம்செய்தான். லண்டன் பட்டணத்திலுள்ள ஒருசாலையில் ரசாயனசாத்திர முறையைப்பற்றிப் பன்னிரண்டு பிரசங்கம்செய்தான். பின்னிட்டு அவ்விஷயமாகவே வேறொருசங்கத்தில் ஆறுபிரசங்கம் செய்தான். பின்பு பள்ளிக்கூடத்தில் வாசிக்கிற சிறுபிள்ளைகளும் பெண்களும் அறிந்துணரும்படியாக ஆறுதடவைபிரசங்கம்செய்தான். இதனால் அவனுக்கு அதிக பெருமையும் பிரசங்கத்தைக்கேட்ட சிறுவர்களுக்கு நல்லறிவும் உண்டாயின. இவ்வாறாகச் சிறுவர்களுக்குப் பத்தொன்பது வருஷகாலம் பிரசங்கம்செய்தான்.

பாரடே அப்போது பெற்றுவந்த சம்பளம் அதிகமல்ல. அவனுடைய பிரசங்கத்தைக்கேட்ட ஒரு பிரபு மிகவும் சந்தோஷமடைந்து அவனுக்கு அதிக வரும்படிக்கு ஒரு உபாயம் செய்யவேண்டுமென்று எண்ணி அவனை ரசாயனசாத்திரபண்டிதராக ஏற்படுத்திச் சம்பளமும் கொடுத்துவந்தார். பாரடே என்பவன் வயது முதிர்ந்து தேகம்தளர்ந்து பிரசங்கம்செய்வதற்கு அசக்தனானபோது தன்னுடைய வேலையிலிருந்து நீங்கவேண்டுமென்று சங்கத்தாரைக் கேட்டபோது வேலையன்றியே சம்பளத்தைமாத்திரம் அங்கிகரித்துக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். பாரடேயினுடைய சம்பந்தமே சங்கத்துக்கு ஒரு பெருமையாயிருந்தது.

பாரடே என்பவனுடைய புகழும் பெருமையும் வரவர அதிகரித்துக்கொண்டே வந்தது. சாத்திரவிஷயத்தில் விடாமுயற்சியோடு மேலுமேலும் பரீக்ஷைசெய்து பதார்த்தலக்ஷணத்தை நன்றாய்த் தெரிந்து பிரசங்கம்செய்துவந்தான். அவனுடைய நடை உடைபாவனையெல்லாம் நன்னடக்கை உள்ள சிறுபிள்ளைகளுடையவைபோலிருக்கும். தினந்தோறும் இரவில் எட்டுமணிநேரம் நித்திரைசெய்வான். காலையில் எழுந்து எட்டுமணிக்குச் சாப்பிடுவான். சங்கத்தைச் சுற்றிப்பார்த்து வேலைசெய்யும் இடத்துக்குப்போவான். தன்மேல் அழுக்குப்படாதிருக்கும்பொருட்டு ஒரு துண்டை மேலே விரித்துக்கொண்டு கருவிகளை எடுத்து வேலைசெய்யத் தொடங்குவான். அவனருகில் ஒரு வேலைக்காரன் எப்போதும் நின்றுகொண்டிருப்பான். அவன் பாரடே சொல்லுகிற வேலையைத் தட்டாமல் செய்வான். சொல்லாதவேலையைச் செய்கிறதில்லை. பாரடே தன் மனதில் தோன்றுகிறபிரகாரம் அப்போதைக்கப்போது கருவிகளைமாற்றி வேலைசெய்வான். அப்படிப் பரீக்ஷைசெய்யும்

போது புதிதாக ஒன்று காணப்படும். அதைக் கண்டஉடனே அவனுக்குண்டாகும் சந்தோஷம் முகத்தில் தெளிவாய்க் காணப்படும். உடனே அதைப்பற்றிச் சிறுசந்தேகம் உண்டாகும். சந்தேகத்தை நீக்கும்பொருட்டு வேறுவிதமாகப் பரீக்ஷைசெய்துபார்ப்பான்.

இப்படி இருக்கையில் தன் வீட்டிலிருக்கிற குழந்தைகளுள் ஒன்று அருகில் உட்கார்ந்து தையல்வேலை செய்துகொண்டிருக்கும். வேலைசெய்யும்போது அதின் விளையாட்டுக்காக ஏதாவது வேடிக்கைசெய்து காண்பிப்பான். இந்தச் சமயத்தில் வெளித்தேசத்து வித்வான்கள் யாராவது அந்தச் சங்கத்தையும் அதிலிருந்து அதைக் கௌரவப்படுத்திய பாரடேயையும் பார்க்கும்பொருட்டு அந்தச் சாலையின் வாசலில் வந்திருப்பதாகச் சீட்டு அனுப்புவார்கள்; அதைக்கண்டஉடனே பரீக்ஷையின் குறிப்பைக் கற்பலகையில் மறந்துபோகாதபடி எழுதிவைத்துவிட்டு மெத்தையின்மேலேபோய்க் காணவந்தவர்களோடு பேசிக்கொண்டிருப்பான். தான் செய்துகொண்டிருந்த வேலையை அவர்கள் வந்து கெடுத்துவிட்டதாகக் கொஞ்சமேனும் தோற்றுவிக்கமாட்டான். அவர்கள் உத்தரவுபெற்றுக்கொண்டு வெளியே போனபின்பு மறுபடியும் வேலைசெய்யும் சாலைக்குப்போய் வேலைசெய்வான். இரண்டரைமணிவரைக்கும் வேலைசெய்து போஜனத்துக்குப்போவான். பின்பு கடிதம் எழுதவேண்டியதாயிருந்தால் எழுதிவிட்டு தான் சேர்ந்திருந்த சங்கங்களுள் எதிலாவது சபைகூடுவதாயிருந்தால் அங்கே போவான். திரும்பிவந்து வேலைக்கூடத்துக்குப்போய்ச் சற்றுநேரம் வேலைசெய்து மெத்தையின்மேல் சென்று தன்னுடைய மனைவியோடு விளையாடிக் காலம் போக்குவான். சற்றுநேரம் விளையாடி முடிந்தபின்பு நாடகப் புத்தகமாவது சரித்திர புத்தகமாவது கையிலெடுத்து உரக்கவாசிப்பான். வாசித்தானஉடனே போஜனம்செய்து கடவுளைப் பிரார்த்தித்து படுக்கையறைக்குப் போய்ச்சேருவான்.

வேனிற்காலமானால் காலையில் தானும் தன் மனைவியுமாக மிருகஜாதிகளை அடைத்துவைத்திருக்கிற தோட்டத்துக்குள் உலாத்தப்போவான். அங்கே புதிதாய் வெளித்தேசங்களிலிருந்து வந்திருக்கிற மிருகங்களை உற்றுப்பார்ப்பான். விசேஷமாய்க் குரங்குகளுடைய சேஷ்டையைக் கண்டு மனமகிழ்வான்.

வெள்ளிக்கிழமை சாயந்திரம் பாரடே ரசாயனபரீக்ஷைசாலையை விட்டு வெளியேபோவதில்லை. பிரசங்கத்துக்கு வேண்டியதான சாமான்களெல்லாம் குறைவின்றி இருக்கின்றனவாவென்று மேற்பார்வைபார்த்து அவைகளைத் தகுந்த இடத்தில் முறைமையாக வைக்கும்படி வேலையிடுவான். அன்றைக்குப் பிரசங்கம் செய்யப்போகிற வித்வானுடன் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டு பிரசங்கம் கேட்கவருகிற சிநேகிதரை உபசரித்து அவர்கள் உட்காரும் இடத்துக்குக் கொண்டுபோய்விடுவான். பிரசங்கம் தொடங்கும்போது

பிரசங்கம் செய்கிறவருக்கு எதிரில் உட்காந்து முடியும்பரியந்தம் கவனமாய்க் கேட்டு அவருக்கு வந்தனம்செய்து கைகொடுத்து அனுப்பிவிட்டு தனக்கு அருமையாயுள்ள சிநேகிதர் இரண்டொருவரைக் கூப்பிட்டுக்கொண்டு மெத்தையின்மேலேபோய் அவர்களுக்கு விருந்தளித்துத் தானும் போஜனம்செய்வான்.

அவனே பிரசங்கம்செய்வதாயிருந்தால் பிரசங்கவிஷயத்தை நன்றாக யோசித்துப் பிரசிங்கிக்கவேண்டிய அம்சங்களை ஒரு கடிதத்தில் எழுதிவைத்துக்கொள்ளுவான். தான் சொல்லும் சங்கதிகளைப் பரீக்ஷைமூலமாய்த் திருஷ்டாந்தப்படுத்தும்பொருட்டு இத்தனை பரீக்ஷைகள் இவ்வாறு செய்யவேண்டுமென்றும் குறித்துவைப்பது வழக்கம். வெள்ளிக்கிழமை காலையிலேயே பரீக்ஷைக்கு வேண்டிய சாமான்களையும் கருவிகளையும் மேசைமீது முறைமையாக எடுத்துவைக்கும்படி உத்தரவுசெய்வான். சாய்ந்திரம் ஆனதும் பிரசங்கம்கேட்க விருப்பமுடையவர் யாவரும் பற்பல இடத்திலிருந்து வந்து சேருவார்கள். ஜனங்கள் அதிகமானதால் சிலருக்கு உட்கார இடமிராது. அவர்கள் நின்றுகொண்டே இருப்பார்கள். யாவரும் வந்து சாலை நிறைந்தஉடனே பாரடே மெத்தைமீதிருந்து கீழே இறங்கிவந்து மேசையின்முன்னின்று மனந்தளராமல் பிரசங்கிக்கத்தொடங்குவான். பிள்ளைகளுக்குப் பிரசங்கம்செய்யும்போதும் இப்படியே. அவர்களுடைய சிற்றறிவுக்குத்தக்க பொருள்களை எடுத்துக்காட்டி அவைகளுடைய தத்துவத்தைப் போதிப்பான். அவனுடைய பிரசங்கத்தைக்கேட்க பிரபுக்கள்மாத்திரமேயன்றி ராஜகுமாரர்களும் வருவதுண்டு.

நாடோறும் ஓயாமல் வேலைசெய்துவந்தபடியால் சிறிதுகாலமானபின்பு பாரடேயிக்குச் சௌக்கியம் சற்றுக் குறைந்தது. முதல் முதல் மறதி அதிகமாயிற்று. அதைக்கண்டு அவன் மனைவி அவனை நாட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் வைத்திருந்தாள். ஒரு வருஷகாலம் அவன் தன் வேலையெல்லாம் நிறுத்திவைத்தான். அந்தக் காலத்தில் வெளித்தேசத்தில் யாத்திரைசெய்தான். திரும்பி லண்டன்பட்டணத்துக்குவந்து பிள்ளைகளுக்குப் பிரசங்கம்செய்ய ஆரம்பித்தான். தேகத்துக்கு அசௌக்கியமானால் நாட்டுக்குப்போய் சிலநாள் அங்கே இருக்கிறது வழக்கம். அசௌக்கியம் அதிகரித்த பின்பு நாட்டுக்குப் போகிறதில்லை. வீட்டிலேயேயிருந்து கதைப் புத்தகங்களை வாசித்துப் பொழுதுபோக்குவான். இல்லாவிடில் தானும் தன் பெண்சாதியுமாக நாடகம்பார்க்கப் போவார்கள். சங்கீத சாலைக்குப்போய்ப் பாட்டுக்கேட்டு வருகிறதும்உண்டு. தான் வாலிபத்தில் வாழ்ந்திருந்த இடங்களை எப்போதாவது போய்ப் பார்ப்பான். தன் தகப்பன் வேலைசெய்த உலைக்களத்தை எக்காலத்திலும் மறந்தவனல்லன்.

துரைத்தனகாரியங்களில் அவனுக்கு மனம் செல்லவில்லை. சாத்திரவிஷயத்திலேயே அவன் காலமுழுவதும் கழிந்தது. மிக்கதிரவியம் சேர்க்கவேண்டுமென்கிற ஆசையும் அவனுக்கு இருந்ததில்லை. வேறுசாத்திரங்களை வாசித்தறியவாவது, ஜனங்களுடைய நிலைமையைச் சீர்திருத்தவாவது, மற்றவர்களோடுகூடி வேடிக்கையாகக் காலங்கழித்து அவர்களுக்கு விருந்துசெய்து தானும் அவர்கள் செய்யும் விருந்துக்குப் போகவாவது அவன் எப்போதும் விரும்பினதில்லை. அவன் உண்டு அவன் சாத்திரமுண்டு. வேறுவிஷயங்களில் தலையிடுகிறதேயில்லை. அவன் லண்டன்பட்டணத்தின் மத்தியில் இருந்தபடியால் பல துரைமார்கள் அவனைக் காணவருவதுண்டு. அவர்களோடு பேசுவதினால் காலம் வீணாகச் செலவழிந்தபோதிலும் தன் மனவருத்தத்தை மறந்துவந்தவர்களை உபசரிக்கிறது அவன் வழக்கம். அவன் தாக்ஷிணிய புருஷனானதால் வந்தவர்களைப் போவென்று சொல்வதற்கு அவன் மனம் துணியாது. அவனோடு பேசவந்தவர்கள் யாவரும் புத்திமான்களல்ல. அநேகம்பேர் சமயாசமயம் தெரியாத மூடர்கள். காலப்போக்குக்காகவே அவனிடம் போய்ப் பேசிக்கொண்டிருப்பார்கள். ஒருநாள் ஒரு வாலிபன் தான் மின்சாத்திரத்தில் புதிதாக ஒன்றைக் கண்டுபிடித்ததாக எண்ணிக்கொண்டு அதைத் தெரிவிக்கும்பொருட்டுப் பாரடே இடத்துக்கு வந்தான். அவ்வாலிபன் சொன்னதையெல்லாம் கேட்டு, "நீர் மின்சாரத்தைப்பற்றி எழுதிய பழையநூலை வாசித்திருக்கிறீரா. நாற்பதுவருஷத்துக்குமுன்னமே நீர் சொல்லுகிற சங்கதியெல்லாம் சாஸ்திரிகளுக்குத் தெரிந்து எழுதிவைத்திருக்கிறார்கள். அதை இப்புத்தகத்தில் காணலாம்" என்று ஒரு புத்தகத்தைக் கையில்கொடுத்து வாலிபனை வீட்டுக்கு அனுப்பினான். அவன் நாணமுற்றுத் தலைகுனிந்து வீடுபோய்ச் சேர்ந்தான்.

(இன்னும் வரும்.)

## குளிர்ச்சி கெடுதிபயப்பது எப்போ?

நமது தேகமெங்கும் ரத்தம் தட்டுத்தடையின்றி ஓடிக்கொண்டிருந்தாலல்லது நமது தேகத்தில் எந்தப்பகுதியும் சூடாயிராது. சீதமானது, மேல்தோலுக்கு அடுத்த உட்புறத்திலுள்ள ரத்தநாடிகளை, உதிரமோடுவதற்கு வழியில்லாதபடி, சுருக்கிப்போடுகின்றது. அதனாலேதான் நமக்குக் குளிர்ச்சியுண்டாகிறது; சூடானது சுருங்கியிருக்கிற நாடிகளை, ரத்தம் நன்றாயோட வழியுண்டாகும்படி மலரச்செய்கின்றது. குளிர்ச்சியால் நமது சர்மம் வெளுத்துச்

சுருங்கிப்போகின்றதே; அதேனெனில், சிறுநாடிகள் சுருங்கி ரத்தம் மேற்புறத்தில் வாராமல் தடைபட்டுப்போவதனாலேதான். தீயண்டைபோனால் உடனே சூடுண்டாகி அந்த நாடிகள் மலர்ந்து போகிறபடியால், மறுபடி உதிரம் அதன்மூலமாய் ஓடி அந்தத் தோல்களைப் பெருத்துச் சிவக்கச்செய்கின்றது.

சரீரத்துள் ரத்தம் வேகமாயோடும்படி செய்கின்ற எந்த வஸ்துவும் நமக்குச் சூடுண்டாகச்செய்யும். ஒருவர்க்கு நாணமுண்டானாலும் கோபமுண்டானாலும் உடனே உடம்பு எவ்வளவு சூடாய்ச் சிவந்துபோகின்றது. ரத்தம் திடீரென்று மேற்புறத்தில் உதைவதனாலேதான் அப்படியாகின்றது. இதேமாதிரியாய் நல்ல நடைநடந்தாலும் ஓடினாலும் வேறெந்தவிதப் பயிற்சிசெய்தாலும் சீதகாலத்திலேகூட நமதுதேகம் சூடாகின்றது. ஏனென்றால், தேஹசலனத்தினால் ரத்தம் தேகமெங்கும் வேகமாயோடத் தலைப்படுகிறது. காலம் அதிக குளிர்ச்சியாயிருக்குமானால், நமது தேகத்தில் உதிரவோட்டமுள்ளளவுதான் சூடும் இருந்துகொண்டிருக்கும்.

ரத்தம் மேற்புறத்தில் பாவுதலாவது மேல்தோலிலன்று. மேல்தோலுக்கு அடுத்த உட்புறத்திலுள்ள புரையிலாம். மேல்தோலில் உணர்ச்சியுமில்லை. ரத்தநாடிகளும் இல்லை. அது தேகத்திற்கு ஓராவரணமாய் உட்புறத்திற்கு யாதொரு தீங்குநேரவொட்டாமல் காக்கின்றது. மேல்தோல் இல்லாமற்போனால் நமது தேகத்தைத் தொடும்போதெல்லாம் நமக்கு நோவுண்டாகும். ஏனென்றால் மேல்தோலுக்கு அடுத்த உட்புறத்திலிருக்கின்ற தோலில் உணர்ச்சி அதிகமாயிருக்கின்றன. அதை அறுத்தாலும் குத்தினாலும் மேல்தோலை உரித்தாலும் நோவுண்டாவதனால், அங்கே உணர்ச்சி அதிகமாக உண்டென்பது நமக்கு நன்றாய்த் தெரிகின்றது அல்லவா? அதுதான் வாஸ்தவமான தோல். உதிரமோடுவதும் அதிலேதான். அதில் ஊசிநாட்ட இடமில்லாமல் ரத்தநரம்புகள் நிறைந்திருக்கின்றன. தோல் தேகத்துக்குள் உண்டாகும் அழுக்குகளை வெளியே கொண்டு தள்ளிச் சரீரத்தைச் சுத்திசெய்ய உதவியாயிருப்பது, அதன் முதன்மையான உபயோகங்களில் ஒன்று.

நாம் முன்னொரு ஸஞ்சிகையில் சொல்லியிருக்கிறபடி ரத்தம் ஓடும்போது அங்குள்ள அழுக்குகளைச் சேர்த்துக்கொண்டு, அவற்றுள் சில பாகத்தைச் சுவாஸாசயத்தில் கொண்டுசேர்க்கின்றது. அங்கே அந்த அழுக்குகள் சுவாசவாயுவோடு கலந்து கெட்ட மூச்சுக்காற்றாய் வெளியே வந்துவிடுகின்றன. இன்னும் சில பாகம் சர்மத்தண்டை போய்ச் சேர்ந்து வேர்வை வடிவமாய் வெளியே வந்துவிடுகின்றது.

நமது தேகத்தில் ஓர் அரைரூபா யளவிடத்தில் மூவாயிரத்திற்குக் குறையாமல் சிறு துவாரங்கள் நிறைந்திருக்கின்றன

வென்று முன்னொரு ஸஞ்சிகையில் சொல்லியிருக்கிறோமல்ல வா? அவையெல்லாம் தேகத்திலுள்ள கெட்ட தண்ணீர் வெளி யேவர ஜலதாரைகளாக இருக்கின்றன.

நமது தேகத்தில் குளிர்ச்சியுண்டாகும்போது உதிரநரம்புகள் சுருங்கிப்போய் ரத்தம் தேகத்தின் அழுக்குகளை மேல்தோலண் டைகொண்டு சேர்க்கக்கூடாமற்போகின்றமையால், அந்த விஷ வஸ்துக்களெல்லாம் வெளியேவாரமல் உள்ளேயே வியாபிக் கின்றன ஆதலால் சீதளதோஷம் அசவுக்கியம் உண்டாக்குகின்ற தென்பது ஆச்சரியமன்று. சர்மமானது தான் செய்யவேண்டிய படி தேஹத்திலுள்ள அழுக்குகளை வெளியே தள்ளாமல் நின்று விட்டால், மற்ற அவயவங்கள் அதை வெளியே தள்ளும்படி அதிகமாய் யத்தனிக்கின்றன. அதனால் வெப்பமுண்டாகி வியாதி உண்டாகின்றது. இப்படி, நாம் குளிர்ச்சியுண்டாகும்படி செய்து கொண்டால் அப்போது நமது தேஹத்து அழுக்குகள் ஒவ்வொரு வேளை ஈரலில் தள்ளப்படுகின்றன; அப்போது ஈரல் நோயுண் டாகும். ஒவ்வொருவேளை குடலில் தள்ளப்படுகின்றன; அப் போது குடல் நோயுண்டாகும். ஒவ்வொருவேளை சுவாஸாசயத் தில் தள்ளப்படுகின்றன; அப்போ ஒருவகைக் கெட்ட குளிரா வது மார்புநோவாவது உண்டாகின்றது. ஆதலால், நமது தேஹத் துக்குச் சில உறுப்புகள் தம்மிடத்திலுள்ள கெட்டவஸ்துக்களை வெளியே தள்ளும்படி வலிந்து முயல்வதனாலேதான் நமக்கு அச வுக்கியமும் வியாதியும் அநேகமாய் உண்டாகின்றன.

நமது தேகத்தில் வேர்வையுண்டாகாமலிருப்பது எப்போதும் அபாயகரமென்பது இதனால் நமக்குத் தெளிவாய்த் தெரியவில் லையா? முன்னொரு ஸஞ்சிகையில் காட்டியிருக்கிறபடி நமது தேகத்தின் மேற்புறத்தில் அழுக்குகள் தங்குவதனாலேதான் வேர்வைநீர் வெளியே வாராமல் நின்றுபோகின்றது. குளிர்ச் சியால் வேர்வை தடைபட்டு அதனால் உண்டாகிற நோய் இத் தேசத்தில் அதிகம். ஆதலால் நமக்குக் குளிர்ச்சி உண்டாவதற் குக் காரணம் இவையென்பதும், அது இந்தக்காலத்தில் உண்டா கின்றதென்பதும் நாம் அறிந்துகொள்ளவேண்டுவது அவசியம்.

நாம் வேகமாய் நடந்துகொண்டிருக்குமளவில் நமக்குக் குளிர் உண்டாவதில்லை. ஏனெனில் அப்போது குளிர் கிட்ட அண்ட வொட்டாமல் ரத்தம் அதிகவேகமாய் ஓடிக்கொண்டு இருக்கும். சூடு அதிகமாகி அயர்ந்துபோவார்களானால் அப்போ குளிருண் டாகும். அப்படியே நாம் சஞ்சரிக்கும் காலங்களில் வேர்வை யுண்டாகி அதனால் நமது உடுப்புகளெல்லாம் நனைந்து ஈரமாய்ப் போனாலும், நாம் நடந்துகொண்டிருக்குமளவும் அதனால் யாதொரு தீங்கும் நேராது. வீட்டில்வந்து அந்த ஈரவாடைகளைக் களையாமல்

அத்தோடு நட்மாடுவோமானால் அது கெடுதிபயக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

சிலர் சீதஜலத்தில் மூழ்கினால் சயித்தியமுண்டாகும் என்றெண்ணிக் குளிர்ந்தநீரைக் கண்டால் நடுங்குகிறார்கள். நமது தேகம் சவுக்கியமாய் இருக்கிறகாலத்தில் நாம் குளிர்நீரில் மூழ்கினால் யாதொரு தீங்கும் நேராமல் இருப்பதுமன்றி மிகவும் தேகத்துக்கு அனுகூலமாயிருக்கும். நாம் நீராடிக் கரையேறியபொழுதே அதனால் உண்டான நன்மை நமக்கு நன்றாய் விளங்கும். நமது தேகம் அசவுக்கியமாயிருக்கும்போது குளித்தாலும், சவுக்கியமாயிருக்குங்காலத்திலும் நெடுநேரம் ஜலத்தில் அளைந்துகொண்டிருந்தாலும் கெடுதியுண்டாகும்.

நமது தேகம் சூடாயும் அனுகூலமாயும் இருக்குங்காலத்தில் நாம் கொஞ்சநேரம் குளிர்ந்த ஜலத்திலானாலும் குளிர்ந்த காற்றிலானாலும் இருப்பதனால் கெடுதி யாதொன்றுமில்லை; முன்னிருந்ததைவிட அதிகமாய்ச் சவுக்கியம் உண்டாகும். சற்றுநேரம் அந்தக் குளிர்ச்சியால் ரக்தம் உள்ளே தங்கியிருப்பதனால், நாம் அதைவிட்டு அப்பால் வந்தவுடன் அந்த ரக்தம் முன்னிலும் நன்றாய்ப் பரவ ஆரம்பிக்கின்றது. நமது தேகத்தில் அசவுக்கியத்தால் நெடுநாளாய்க் குளிர் தொடர்ந்துகொண்டிருந்தால்தான் கொஞ்சம் நீர் பட்டாலும் காற்றுபட்டாலும் குளிரும் ஜ்வரமும் உண்டாகின்றது. நாம் வலிமையாயும் சவுக்கியமாயும் இருக்கும்போது நாடோறும் நன்னீரில் நீராடிக்கொண்டு இருப்பதைவிட அனுகூலமானது வேறொன்றும் இல்லை. ஆனால் துரிதமாய் ஜலத்தைவிட்டு வெளியே வரும்படியாகவும், வெளியே வந்தவுடன் நன்றாய் உடம்பைத் துடைத்துக்கொள்ளும்படியாகவும் நாம் கவனமாயிருக்கவேண்டும்.

சிறுபிள்ளைகளுக்கோ அப்படியல்ல, அவைகளுக்குக் குளிர்ந்தகாற்றும் குளிர்ந்தநீரும் உதவா. பிள்ளை எவ்வளவுசிறிதோ அவ்வளவு குளிரைத் தடுக்கிறசக்தியும் குறைவு. இது தாய்மார்களுக்கு அநேகமாய்த் தெரியும். குழந்தைகளைத் திறந்தபடி வெளியே காற்றுக்குநேராய் ஒருபோதும் கொண்டுவரக்கூடாது. அதனால் தலைநோய் வயிற்றுநோய் முதலியவையுண்டாகும். சிறுகுழந்தைகள் உட்கொள்ளுகிற காற்று எப்போதும் சுத்தமானதாயிருக்கவேண்டும். குழந்தைகளை அதிகமாய் நீராட்டிக்கொண்டு இருக்கவேண்டும். வெந்நீர்தான் அநேகமாய்ச் சிறுபிள்ளைகள் தேகத்துக்கு ஒத்திருக்கும்.

## அக்பர் சமஸ்தானத்தின் சிறப்பு.

சற்றேறக்குறைய முன்னூறுவருஷத்துக்குமுன்னே இந்துதேசத்தின் வடபாகத்தை மோகலாய் பிரபுக்கள் அரசாண்டுவந்தார்களென்பது யாவருக்கும் தெரியுமே. அப்படி டில்லிப்பட்டணத்தை ராஜதானியாகக்கொண்டு ஆண்டுவந்த மோகலாய் அரசர்களுள் அக்பர் பாதுஷா மிக மேன்மையும் கீர்த்தியும் பெற்றவர். உலகத்திலுள்ள பற்பல தேசங்களை ஆதிமுதல் அநேக அரசர்கள் ஆண்டுவந்தார்கள். அவர்களுக்குளெல்லாம் ஜனங்களுடைய சௌக்கியத்துக்குப் பாடுபட்டுச் செங்கோல் செலுத்தினவர்கள் இத்தனைபேரென்று விரல்மடக்கிச்சொல்லலாம். அவர்களைத்தவிர மற்ற அரசர்களைப்பற்றிச் சிறப்பாகப்பேச இடமில்லை. அப்படிப் பிரசித்திபெற்ற அரசர்களுள் அக்பர்பாதுஷா என்பவரும் ஒருவர்; அவருடைய சமஸ்தானத்தின் பெருமையை ஒருவாறு சொல்லுவோம்.

அக்பர்பாதுஷாவினுடைய சமஸ்தானத்துக்குச் சமானமாகச் சொல்லுவதற்கு முன்னும் இல்லை பின்னும் இல்லை. அது ஒப்புயர்வு இல்லாதது. அவருடைய சமஸ்தானத்திலிருந்த இரத்தினங்களும், பொன் வெள்ளியும் வேறெந்த இடத்திலும் இருந்ததில்லை. அவைகளின் விலையை இன்னதென்று ஒருவரும் மதிக்கக்கூடாது. அவருக்குமுன் இந்துதேசத்தை ஆண்ட சக்கரவர்த்திகளொருவரிடத்திலும் அவ்வளவு அதிசயமிருந்ததில்லை. அக்பர் பாதுஷாவானவர் வெள்ளிக்கிழமையும் நாயிற்றுக்கிழமையும் மாமிசபோசனம் செய்கிறதில்லை. மற்றத் தினங்களிலும் பால், மோர், தயிர், சாதம் இவைகளைத்தான் விசேஷமாய்ச் சாப்பிடுவோர். ஆயினும் எந்தவேளையிலும் நூறு பேருக்குக் குறையாமல் சாதமும் கறியும் சமைத்துவைத்திருப்பார்கள்.

அவருக்குக் குடிகள் வருஷந்தோறும் செலுத்திவந்த இறை முப்பது கோடி ரூபா. அவருக்குச் சொந்தமான சாகீரிலும் சுபாவிலுமிருந்து வந்த வரும்படி இருபதுகோடி ரூபா. அவரிடத்திலிருந்த குதிரைவீரர்கள் மூன்றுலக்ஷம்பேர். காலாட்களும் அவ்வளவே. சண்டைசெய்வதற்குப் பழகியிருந்த யானைகள் ஆயிரம். இந்தச் சேனை எக்காலத்திலும் அவருடைய தேசத்திலிருந்தது. சண்டைக்காலத்திலோவென்றால் போர்ச்சேவகரின் கணக்குச் சொல்லிமுடியாது. இப்பெரிய சேனையின் பயத்தினாலே அக்பர் பாதுஷாவுக்குக் கீழ்ப்பட்ட பிரபுக்களெல்லாம் அடங்கியிருந்தார்கள். வேறு தேசத்து அரசர்கள் அவருடைய சிநேகத்தைப் பாராட்டிவந்தார்கள்.

அவருடைய சமஸ்தானம் மிகவும் மகிமைபொருந்தியது. அக்காலத்தில் விசேஷ நாகரீகமாகவும் இருந்தது. மோகல் ஜாதியாரெல்லாரும் பெருமையையும் கீர்த்தியையும் நாடியவர்கள். டில்லிப்பட்டணத்தில் வாசம் செய்த பிரபுக்களெல்லாம் கோடீசுவரர்கள். அவர்கள் தரித்தாபரணங்களையும் சித்திரப்பூம்பட்டாடைகளையும் விலைமதிக்கக்கூடாது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் வேலையாட்கள் குறைந்தது ஆயிரம்பேரிருக்கும்.

அவர்களெல்லாரும் விலையுயர்ந்த வஸ்திராபரணங்கள் அணிந்திருப்பார்கள். இந்தக் காட்சியைப் பார்க்கும்போது டில்லிப்பட்டணத்தில் அநேக சக்கரவர்த்திகள் வந்து கூடியிருப்பதாகத் தோன்றுமேயன்றி, ஒரே அரசன் வாசம்செய்கிறதாகத் தோன்றாது. அக்பர்பாதுஷாவும் அவருடைய ராஜ்யத்திலிருந்த பிரபுக்களும் வித்துவான்களைப் பரிபாலித்து வந்தார்கள். அக்காலத்தில் கல்விக்கு இருந்த பெருமையும் சிறப்பும் எக்காலத்திலும் இருந்ததில்லை. அவர்களுடைய உதாரகுணத்தைக்கண்டு வெளித்தேசங்களிலிருந்து அநேக வித்துவான்கள் டில்லிப்பட்டணத்துக்கு வந்து வாழ்ந்திருந்தார்கள். அந்தச் சமஸ்தானத்துக்கு வித்துவான்களால் உண்டாகிய கீர்த்தியும் சிறப்பும் எழுதிமுடியா. டில்லிப்பட்டணத்தின் பெருமை வரவர விருத்தியடைந்து உலகமெங்கும் பரவிற்று.

அக்பர் பாதுஷாவுக்கு முன் இந்துதேசத்தை ஆண்ட மோகலாய் அரசர்கள் வெளித்தேசங்களிலிருந்து குடியேறியவர்கள். இந்துதேசத்து அரசரோடு போர்செய்து அவர்களை ஜெயித்து டில்லிப்பட்டணத்தைக் கைப்பற்றினார்கள். அவர்கள் செய்த சண்டைகளால் இத்தேசத்துக்கு மிகுந்த நஷ்டமுண்டாயிற்று. அக்பர் பாதுஷாவோ அப்படியல்ல, டில்லிராஜ்யம் அவருக்குப் பிதுரார்ஜிதமாகக் கிடைத்தது. ஆதலால் சண்டைசெய்வதற்கு அவருக்கு யாதொரு காரணமும் இல்லை. தேசத்தினுடைய சௌக்கியத்தின்பொருட்டே தன் காலத்தைக் கழித்தார். டில்லிராஜ்யம் அவருடைய முன்னோர்காலத்தில் கைப்பற்றியதாயினும், சிற்றரசர்களுக்கு மோகலாயர்பேரிலிருந்த மனவருத்தம் முழுதும் நீங்கவில்லை. அப்படியிருந்தும் யாவரும் அக்பர் பாதுஷாவினுடைய அரசாட்சியை விரும்பினார்கள். அவருடைய ஆளுகையில் பக்ஷபாதமென்பது எத்துணையும் கிடையாது. அவருடைய சொந்த மனுஷராயிருந்தபோதிலும் நியாயப்படி நடப்பதேதவிர பிசகுவதில்லை. ஜாதிமதாபிமானங்களுக்கு அவர் இடம்கொடுக்கிறதில்லை. அவருக்குக் கீழ்ப்பட்ட மாகாணங்களுக்குக் கவர்னர்களை ஏற்படுத்தும்போது அவர்களுடைய ஜாதியைக் கவனிக்கிறதில்லை. ஜனங்களுக்குச் சௌக்கியமும் தமக்குக் கீர்த்தியும் உண்டாக்கத்தகுந்த பிரபுக்களையே தெரிந்தெடுத்து அவர்களைக் கவர்னர்வேலைக்கு நியமிப்பார். ஜனங்களுடைய க்ஷேமத்தை யோசிப்பதேயன்றி தனியான மனுஷருடைய விருத்தியைப்பற்றி யோசிப்பதில்லை. அவருடைய காலத்தில் ஜனங்களுடைய பணத்தைக் கொள்ளையடித்து ஐசுவரியவான்களாக ஒருவரும் ஆனதில்லை. கவர்னர்களை ஏற்படுத்துவதைப்பார்க்கிலும் அவர்களை நடத்துவதில் அவருடைய சாமர்த்தியம் விசேஷமாகத் தோன்றும். அவர்களை நியமித்தபின்பு வெகு ஜாக்கிரதையாக அவர்களுடைய செய்கைகளைப் பார்த்துவருவார். அவர்கள் ஒவ்வொரு விஷயத்துக்கும் திருப்தியான கணக்கனுப்பவேண்டியதாயிருந்தது. கீழதிகாரிகள் இக்காலத்தில் இருக்கிற

வர்களைப்போல அசக்தர்களாயாவது சாமர்த்தியமற்றவர்களாயாவது இருந்தால் அதைப்பற்றி அவர் கவனிக்காமல் இருக்கமாட்டார்.

வேனிற்காலத்தில் யமுனாநதி வற்றிப்போவதால் அதின் வழியாகப் பிரயாணம் செய்வதற்காவது, வர்த்தகம் செய்வதற்காவது சரிப்படாது. அதுகண்டு டில்லிப்பட்டணத்தை விட்டு ஆக்கிராநகரத்தை ராஜதானியாக்கினார். அந்தப்பட்டணம்வரைக்கும் நதியில் ஜலம் எப்போதும் தட்டாமல் இருந்துகொண்டிருக்கும். வேனிற்காலத்தில் யமுனாநதியின் பாய்ச்சலில் ஏறக்குறைய நூற்றைம்பது ஏகராநிலம் சாகுபடியாகும்-தோட்டப்பயிர்கள் அதில் நன்றாகவிளையும்.

ஆக்கிராநகரம் மகம்மதியர்காலத்துக்கு முன்பாகவே பெயர்பெற்றிருந்தது. அதன் பெருமையைக் குஜினிநகரத்துக் கவிஞர் கொண்டாடியிருக்கிறார்கள். மோகலாயர்காலத்தில் அதைப்போல் சிறப்புற்றோங்கிய நகரம் வேறொன்றும் இல்லையென்று ஜிஹாங்கிர் என்னும் அரசர் சொல்லியிருக்கிறார். அதில் இருக்கிற பெரிய கோவில் அக்பர்பாதுஷாவினால் கட்டப்பட்டது. அது 1563-ம் வருஷம் ஆரம்பமாகி நாலுவருஷத்தில் கட்டிமுடிந்தது. அது ஒருமயில் சுற்றளவுள்ளது. அக்கோவில் கட்டிய கற்கள் எகிப்துதேசத்துக் கோரிகளிலிருக்கிற கற்களைப்போல் பெரியவையாயிருக்கும். இதுதவிர பேபர் அரசரால் வளைக்கப்பட்ட சிங்காரவனம் ஒன்றிருக்கின்றது. அதில் ரோஜாபுஷ்பத்தின் மணம் மிக விசேஷமாயிருக்கும். அக்பர் பாதுஷாவானவர் ஆக்கிராநகரத்தை அலங்காரம் செய்ததுபோலவே அவருடைய ராஜ்யத்திலிருந்த சிற்றரசர்களும் அவரவர்களுடைய பட்டணங்களை அலங்காரம் செய்தார்கள். ஆக்கிராநகரத்தில் வியாபாரம் விஸ்தாரமாக நடந்துவந்தது. மழையில்லாக்காலத்தில் சற்றேறக்குறைய ஏழெட்டுமாதம்வரைக்கும் காபூல்முதலான தேசங்களிலிருந்து அனுதினம் எண்ணாயிரம் குதிரைகள் ஆக்கிராபட்டணத்துக்கு வரும். ஒரு நாளுக்குள்ளே அந்தக் குதிரைகளெல்லாம் விலையாய்விடும். மறுநாளைக்கு ஒன்றும் விலைக்கு அகப்படாது. இவ்வாறாக ஜிஹாங்கிர் அரசர் சொல்லியிருக்கிறார்.

யமுனாநதிக்கரையில் அந்தப்புரம் கட்டப்பட்டிருந்தது. அதைச்சுற்றிலும் சலவைக்கல்லினால் சுவர் எழுப்பியிருந்தது. அந்த அந்தப்புரத்தில் அழகிற்சிறந்த பெண்கள் சேர்ந்திருந்தார்கள். அக்பர் பாதுஷாவினுடைய அந்தப்புரத்தில் ஏழாயிரம் ஜனங்களிருந்தார்கள். அவர்களுள் ஐயாயிரம் பேர் ஸ்திரீகள். ஒவ்வொருவருக்கும் தகுந்த சம்பளமும் இருப்பிடமும் கொடுத்துவந்தார். அவர்கள் சம்பளம் மாதத்துக்கு அறுநூறு ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரைக்கும் இருந்தது.

ஆக்கிராநகரத்திலிருந்து டில்லிப்பட்டணத்துக்குப் போகும்வழியில் இருபத்தினன்குமயில் தூரத்தில் மணற்குன்றின்மீது அக்பர் ஒரு மாளிகை

கட்டினர். அதைச்சுற்றிக் கட்டியிருந்த சுவரின் நீளம் ஆறுமயில். இந்த மாளிகையில் மிருகங்களைச் சண்டைவிட்டு வேடிக்கைபார்ப்பது வழக்கம். இந்தச் சிங்காரமாளிகை இப்போது அழிந்திருக்கின்றது. சுவர்களும் கொத்தளங்களும் இடிந்துகிடக்கின்றன. இருபதுமயில் சுற்றளவுள்ள ஒரு குளமும் இடிந்துகிடக்கின்றது.

அக்பர் பாதுஷாவுக்கு இருபத்தெட்டு வயதுவரைக்கும் பிறந்தபிள்ளைகள் ஜீவித்திருக்கவில்லை. இதன்பொருட்டு ஆக்கிராநகரத்திலிருந்து கால்நடையாக ஆஜ்மீர் பட்டணத்துக்குப்போய் அங்கேயிருந்த பக்கிரியினுடைய சமாதிக்கு முன்பாகப் பிரார்த்தனை செலுத்தினர். ஆக்கிராவுக்கும் ஆஜ்மீருக்கும் உள்ளதூரம் இருநூறுமயில்.

இவ்வாறு பிரார்த்தனை செலுத்தியும் நினைத்தகாரியம் நிறைவேறவில்லை. மறுவருஷம் அக்பர் பாதுஷாவானவர் தம்முடைய மனைவியை ஷேக்ஸலீம் என்கிற வேறொரு பக்கிரியினிடத்துக்கு அழைத்துக்கொண்டுபோனர். அந்தப் பக்கிரியினுடைய மகத்துவத்தால் பிள்ளைப்பேறு உண்டாகுமென்று அவரிடத்திலேயே இருக்கும்படிப் பாதுஷா உத்திரவுசெய்தார். சிலகாலம் இருந்தபிற்பாடு அந்த அம்மாளுக்குப் பிள்ளைபிறந்தது. அந்தப் பிள்ளைக்குப் பக்கிரியினுடைய பெயரே வைத்தார். அக்பர் பாதுஷாவுக்குப்பின்பு அந்தப் பிள்ளை ஜிஹாங்கிர் என்கிற நாமத்தோடு சிம்மாசனம் ஏறினர். ஜிஹாங்கிர் அரசர் தம்மை எப்போதும் அந்தப் பக்கிரியினுடைய அடிமையென்று சொல்லிக்கொள்ளுவார். அவர்பொருட்டுத் தம்முடைய காதைக் குத்திக்கொண்டு அடிமையின் அறிகுறியாகிய ஆபரணத்தை அதில் அணிந்துகொண்டார்.

அக்பர் பாதுஷாவினுடைய தேவபக்தியால் பிறந்தவர் ஜிஹாங்கிர் ஒருவர்மாத்திரம் அல்லர். டானியல் என்கிற மற்றொரு குமாரரும் ஒரு பக்கிரிவீட்டில் பிறந்தவர்தாம்.

இந்துதேசத்தில் அக்பர் அரசாண்டகாலத்தில் எங்கிலாந்து தேசத்தில் எலிஜபத் என்னும் இராணி அரசாண்டுவந்தார். அந்த இராணி பட்டத்துக்கு வருவதற்கு மூன்று வருஷத்துக்குமுன்னரே அக்பர் சிம்மாசனம் ஏறினர்.

இராணி தேகவியோகம் அடைவதற்கு இரண்டு வருஷத்துக்கு முன்னமே பாதுஷா பரகதியடைந்துவிட்டார். இராணியார் இறந்த இருநூறு வருஷமளவும் எங்கிலாந்து தேசத்தார் அவருடைய பெருமையை நினைத்து அவரை மறவாதிருந்தார்கள். இந்துதேசத்தார்களோ இருநூறு வருஷமாத்திரம் அல்ல; நாளதுவரைக்கும் பாதுஷாவை மறவாதிருப்பதற்குக் காரணம் இருக்கின்றது.

எலிஜபத் இராணியாருடைய பெருமைக்கும் கீர்த்திக்கும் காரணம் அவருடைய சமஸ்தானத்தில் இருந்த மந்திரிகளும் பிரபுக்களுமே. அக்பர்

பாதுஷாவினுடைய சமஸ்தானத்திலும் பெரிய பிரபுக்கள் இருவர் இருந்தார்கள். அவரைப்போல் சிறந்த மந்திரிகள் இந்த ஆஷியாகண்டத்தில் இருந்ததில்லை. ஜனங்களுடைய சம்ரக்ஷணைக்கு வேண்டிய உபாயங்களைப் பாதுஷாவோடுகூடிச் செய்துவந்தார்கள். அவர்கள்தாம் அபுல் பேஜல் என்பவரும், அவருடைய சகோதரராகிய பீஜ் என்பவரும். அவ்விருவரும் பாதுஷாவுக்கு அந்தரங்கமான மந்திரிகள். பாதுஷாவானவர் வேலையில்லாதகாலத்தில் அவர்களோடு சேர்ந்து காலத்தைப் போக்குவார். அவர் அவர்களிடத்தில் ராஜகாரியங்களைப்பற்றி யோசிப்பார். அவருடைய அரசாட்சியைச் சரித்திரத்தில் எழுதிவைத்தவர்கள் அவ்விருவருமே. அவ்விருவருள் முதல்வர் அரசாட்சிமுறைமை நன்றாய்த் தெரிந்தவர். மற்றவர் அக்காலத்திலிருந்த பண்டிதரெல்லாரிலும் சிறந்தவர். அவ்விருவரும் இருபத்தைந்து வருஷகாலம் அக்பர் பாதுஷாவுடன்கூட இருந்து அவருக்கு யோசனைசொல்லிவந்தார்கள். அவர்கள் இருவரும் சேர்ந்து இரண்டு கிரந்தங்களைச் செய்திருக்கிறார்கள். அவற்றில் அந்தக்காலத்தில் இருந்த ஜனத்தொகையும் மதபேதமும் கலையும் வித்தையும் கிராமங்களுடைய பேரீஜும் மற்ற வரும்படியும் கணக்கிட்டுச் சொல்லியிருக்கின்றன. பாதுஷாவினுடைய சரித்திரமும் எழுதியிருக்கின்றது.

மேற்சொன்ன மந்திரியும் பண்டிதரும் ஒரு துலுக்கருடைய குமாரர்கள். ஹிந்துக்களுடைய வேதசாஸ்திரங்களை ஆராய்ந்து அவற்றின் உண்மையை அறியவேண்டுமென்று பாடுபட்ட மகம்மதியர் பீஜ் என்ற அவர் ஒருவரே. காசிப்பட்டணத்துக்குப்போய் வேதசாஸ்திரம் அறிந்த ஒரு பிராமணரிடத்தில் கற்றுவந்தார். அந்த மகம்மதியர் ஹிந்துமதத்தை அபிமானிக்க விருப்பமுள்ளவர் என்று எண்ணிப் பிராமணர் அவருக்குச் சகல வித்தையையும் சொல்லிவைத்தார். பின்பு தாம் மோசம்போனதாக அவருக்குத் தெரியவந்தது. அவர் தம்முடைய மதத்தின் உண்மையைப் புறச்சமயத்தானுக்கு வெளியிட்ட பாபத்துக்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டுமென்றும், அதற்கு அக்கினிப்பிரவேசமே பிராயச்சித்தமாகச் செய்யவேண்டுமென்றும் தீர்மானித்துக்கொண்டார். இது கண்டு பீஜ் என்பவர் தாம் தெரிந்துகொண்ட இரகசியத்தை வெளியிடுவதில்லையென்று சத்தியம் செய்தபின்பு அவர் ஜீவித்திருக்கச் சம்மதித்தார். அக்பர், பட்டத்துக்கு வந்த பன்னிரண்டாம் வருஷமுதல் அவர் தேகவியோகம் அடைவதற்கு ஒரு வருஷம்வரைக்கும் அந்த இரண்டு சகோதரர்களும் பாதுஷாவோடு கூடவே இருந்துகொண்டிருந்தார்கள். அந்த மோகலாயர்காலத்தில் கல்விச்சிறப்பு ஓங்கிநின்றது. பாதுஷாவினுடைய வாளைப்பார்க்கிலும் அபுல்பேஜல் என்பவருடைய பேனா மிகச் சிறந்தது என்று அக்காலத்தில் சொல்வதுவழக்கம்.

(இன்னும் வரும்.)

# தசகுமாரசரிதம்.

## மூன்றுவது:

## உபஹாரவர்மாவின் கதை.

ராஜகுமாரனைத் தேடிக்கொண்டுபோன உபஹாரவர்மா என்பவன் மிதிலாபுரிசென்று அங்கே தன் பெரியஅண்ணன் பிள்ளைகள் தன் தகப்பனைக் காவல்செய்திருக்கிறார்களென்றும், தானிறந்துபோனதாய் அவர்கள் நினைத்திருக்கிறார்களென்றும் தன்னை எடுத்துவளர்த்த தாதிசொல்லக் கேள்விப்பட்டு, உடனே தான் இன்னானென்பதை அவளுக்குத் தெரிவித்து, அப்போது அந்தப்புரத்துத் தாதியாயிருக்கும் அவள் மகளைக்கொண்டு அவ்விடத்தில் ராஜனாயிருக்கிற விகடவர்மா குரூபியென்றும், அதனால் அவன் மனையாளுக்கு அவனிடத்தில் விருப்பமில்லையென்றும் அறிந்து, இதுவே இப்பட்டணத்தை நாம் கைக்கொள்ள வழியென்று யோசித்து, அவ்வரசிக்குத் தன்னிடத்தில் விருப்பமுண்டாகச்செய்யும்படி அந்தத் தாதியையே ஆள்படுத்தியனுப்ப, அவள் அந்த ராஜமஹிஷி இவனைவிட மற்றொருவரிடத்திலும் தனக்கு ஆசையில்லையென்று சொன்னதாய்ச் சொன்னாளென்று சென்ற சஞ்சிகையில் முடித்திருக்கிறோம். அவன் இன்னும் தன் கதையைச் சொல்லுகிறான்.

மேலும் அவளைக்கொண்டே அந்த அந்தப்புரத்தின் ஸந்நிவேசத்தையும், அங்கே காவலாளிகள் ஏற்படுத்தியிருக்குமிடங்களையும், உத்தியானவனத்தின் நிலைமைமுதலியவைகளையும் செம்மையாயறிந்துகொண்டு அஸ்தமயமானவுடன், இனி நாம் செய்த யோசனை கைகூடியதுபோலவே; ஆயினென்று, அயல்பெண்டிரைப் பிடிப்பதென்றால் அநியாயமல்லவா? இது நம்தோழர்கள் காதிற்கெட்டினால் என்ன நினைப்பார்கள். ஆயினும் ஒரு நன்மையுண்டாக்குவதற்காகப் பாபஞ்செய்தாலும் செய்யலாமென்று இருக்கிறதாதலால் அவ்வளவாய்க் கெடுதியிராதென்று இப்படி ஆலோசித்துக்கொண்டே கண்ணயர்ந்தேன். ஸ்வப்பனத்தில் விநாயகக்கடவுள் வந்து "குழந்தாய் நீ கவலைப்படவேண்டாம். நீ என்னுடைய அம்சமாய்ப் பிறந்திருக்கிறாய். இந்தப் பெண் நான் நீந்திவிளையாடுகிற ஆகாயகங்கை. நான் ஒருநாள் உல்லோலகல்லோலமாய்க் கலக்குவதை ஆகாசகங்கை பொறுக்கமாட்டாமல் மனிதனாய்ப்போம்படி என்னைச் சபித்தாள். அப்படிக் காரணமின்றிச் சபித்ததைச் சகியாமல் நானும் 'நீ பூலோகத்திற்குப்போய்ப் பிறந்து பலபேருக்கும் பொதுமகளாய்ப் போகக்கடவை' என்று அவளைச் சபித்தேன். ஆதலால் இவ்விஷயத்தில் நீ பயப்படவேண்டாம்" என்றார். உடனே விழித்துக்கொண்டு ஸந்தோஷமாயிருந்தேன். மறுநாள் ராத்திரி கத்திகேடயமுதலிய ஆயுதங்களோடு புறப்பட்டு முன் தாய்க்கிழவிசொல்லிய அடையாளத்தின்படியே அப்பட்டணத்து அகழைக்கடந்து மதிளேறிக்குதித்து அந்நகரவீதிகளையெல்லாம் பார்த்துக்கொண்டேபோய் அந்த உத்தியானவனத்திற்சென்றேன். அதனுள் ஒரு

பாகத்தில் பற்பல வினோதங்களால் அலங்கரித்து பூம்படுக்கை சிங்காரித்து மண்டபமொன்றிருக்கக்கண்டு அங்கே சற்று உட்கார்ந்து இளைப்பாறிக்கொண்டிருக்கையில் காலடியோசைகேட்டது. உடனே நான் எழுந்து அருகிலிருந்த மரத்தில் மறைந்துகொண்டேன். உடனே அவ்வாசி அவ்விடம்வந்து என்னைக்காணாமல் பலவிதமாய்த் தன் மனதை வெறுத்துக்கொண்டு, ஓ மன்மததேவனே! நான் உமக்கு ஏது பிழைசெய்தேன். ஏன் என்னை உயிர்வாங்காமல் இப்படி சித்திரவதைசெய்கிறாய் என்று இவ்வாறு பலவகையாய்க்கதறத் தலைப்படவே, நான் அவளெதிரே தோன்றி, நீ மன்மதனுக்கு எவ்வளவோ அபார்தம்செய்திருக்கிறாய். அவனுயிர்க்கொப்பான ரதிதேவியையே உன் அழகால் அவமதிக்கிறையே; இதைவிட வேறென்ன வேண்டும். நிரபராதியான என்னை வருத்துகிறானென்பதுதான் அவனிடத்திற் பெரும்பிழை. ஆதலால் நீ மன்மதப்பாம்புகடித்த என்னை உன் கடைக்கண்ணோக்காகிய மருந்தைக்கொடுத்துப் பிழைப்பிக்கக்கடவையென்று வேண்டினேன். இப்படி இருவரும் கொஞ்சநேரம் வினோதமாய்ப் பேசிக்கொண்டிருந்து பிறகு நான் வெளியேபோகப் புறப்பட்டதுகண்டு, அந்தச் சுந்தரி, நீ என்னைவிட்டுப் போவாயானால் என்னுயிரும் உன் பின்னேயே போய்விடும். என்னையும் கூட்டிக்கொண்டுபோவென்றாள். அதற்கு நான் அடி பேதையே! தன்னைவேண்டுகிற பெண்ணை உபேக்ஷைசெய்பவன் கூட ஜீவகோடியில் சேர்க்கையாவனோ? நான் ஒருபோதும் உன்னை விட்டுப் போகமாட்டேன். ஒருபாயம் சொல்லுகிறேன் கேள், நான் எழுதிக்கொடுத்த என் படத்தை அரசனுக்குக் காட்டி இது புருஷரூபங்களிற் சிறந்ததுதானோவென்றுகேள்; அவன் ஆமென்று சொல்லுவான். மறுபடியும் கேள், ஆனால் தேசாதேசமும் சுற்றிவந்த தாபஸி ஒருத்தி இதை எனக்குக் காட்டி ஒரு செய்திசொன்னாள். பெண்ணே! ஒரு மந்திரமுண்டு; நீ உபவாசமிருந்து பருவத்து ராத்திரியில் பெரிதாய்த் தீவளர்த்தி புரோஹிதர்கள் ஓமஞ்செய்தபின்பு அந்த மந்திரத்தைச்சொல்லிச் சமித்து கர்ப்பூரம் பட்டாடைமுதலியவைகளை ஓமஞ்செய்தையேயானால் உனக்கிந்த ரூபமுண்டாகும். உடனே நீ அடிக்கிற மணியோசைகேட்டு உன் புருஷன் வந்து தனக்குள்ள ரகசிய விருத்தாந்தங்களையெல்லாம் உன்னுடன்சொல்லிக் கண்ணை மூடிக்கொண்டு உன்னை ஆலிங்கனஞ்செய்துகொள்வானானால் இந்த அழகு அவனைச் சேர்ந்துபோம். நீ முன்போலவே ஆவாய்; அதற்கு யாதொரு சந்தேகமுமில்லை என்றாள். அது உனக்குச் சம்மதமானால் வேண்டியவர்களோடு ஆலோசித்துக்கொண்டு அப்படியே நடத்தலாமென்றுசொல். அவன் அதைஅங்கீகரிப்பான். நான் இந்த உத்தியானவனத்திலேயே தீவளர்த்திவிட்டு இந்தக் கொடிமண்டபத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கிறேன். நீயோ சாயங்காலவேளையில்

விநோதமாய்ப் புன்னகையோடு நானென்னசெய்தாலென்ன? நன்றியற்ற நீர் நான் உண்டாக்கிக்கொடுத்த நல்லவடிவத்தைக்கொண்டு அயல்பெண்டிர்களோடு விளையாடப்போகிறீர். யானைபோலத் தன் தலையில்தானே ஏன் மண்ணைப்போட்டுக்கொள்ளவேண்டுமென்று சொல். அதற்கு அவன் என்னசொல்லுகிறானோ அதை எனக்குத் தெரிவி; அதற்குமேல் செய்யவேண்டுவது எனக்குத் தெரியும். இவ்விடத்திலிருக்கும் என் காலடிகளை மறைத்துப்போடு என்று சொல்ல, அவள் அப்படியேயென்று அந்தப்புரம்போய்ச்சேர்ந்தாள். நானும் போனவழியே வீடுவந்துசேர்ந்தேன்.

நான் உபதேசித்துச் சொல்லியனுப்பியபடியே அவள் நடத்தினாள். அந்த மூடனும் அவள் சொன்னதை மெய்யென்று நம்பினான். பெரிய விநோதமாய் இந்தச்செய்தி எங்கும் பாவிற்று. மந்திரிமுதலியவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். இப்படிப் பட்டணமெல்லாம் அரசனுக்கு அழகுண்டாகப்போகிறதென்று அம்மளிதும்மளியாயிருக்கையில், பருவத்தன்று ராத்திரி அந்த உத்தியானவனத்தினின்றும் அபாரமாய்ப் புகைகளும் நெய்முதலியவைகள் ஓமஞ்செய்தவாதனையும் எங்கும் வியாபித்தது. அந்தப் புகை அடங்கினவுடன் நான் சங்கேதஸ்தலத்திற்குச்சென்றேன். அவளும் அங்கே வந்துசேர்ந்து உன் உபதேசப்படியெல்லாம் நடத்திவிட்டேன்; கடைசியில் அவனுக்கு விசேஷநம்பிக்கையுண்டாவதற்காக நீர் சொன்னபடிகேட்டேன். அதற்கு அவன், என்னை அநேகமாய் வேண்டிக்கொண்டு அம்மா! இதுவரையில் நான்செய்த பிழைகளைப் பொறுத்துக்கொள்; இனி நான் உன்னைத்தவிர மற்றெவர் முகத்தையும் பார்க்கிறதில்லை. செய்யவேண்டிய காரியத்தைச் சீக்கிரமாய் நிறைவேற்றென்றான். ஆதலால் நிர்ப்பயமாய் உன்னிடத்திற்கு வந்தேனென்றாள். கொஞ்சநேரம் அவளுடன் விநோதமாய்ப் பேசி அவளை அங்கேயே நிறுத்திவிட்டு நான் அந்த ஓமசாலைக்கு வந்து அங்கே கட்டியிருந்த மணியை அடித்துவிட்டு அகரு, சந்தனமுதலியவைகளையெல்லாம் ஓமஞ்செய்ய ஆரம்பித்தேன். அந்தப் புருஷன் அங்கேவந்து ஏதோ கவலையுள்ளவன்போல் மயங்கிநிற்பதுகண்டு நான், நீ உண்மையாய்ச் சொல்; இனி நீ ஒருவரையும் கண்ணெடுத்துப் பாராமலிருந்தால்தான் இந்த ரூபத்தை உன்னிடத்தில் ஒட்டவைப்பேனென்று சொல்ல, அவன் தன் மனைவிக்குத்தான் இந்த வடிவழகுண்டாயிற்றென்று எண்ணி சபதம்பண்ணத்தொடங்கினான். அதுகேட்டு நான், வீணாய்ச் சபதம்பண்ணுவானேன்? இப்பூமியில் என்னைவிட அழகியபெண் எவளிருக்கிறாள்? தேவப்பெண்களோடு சேர விருப்பமிருந்தால் சுகமாய்ச் சேரு. உனக்கு என்னென்ன ரகசியங்களுண்டு, அவைகளைச் சொன்னால்தான் உனக்குப் பழயவடிவம் போமென்றேன். அதைக் கேட்டு அவன், 'காவல்செய்யப்பட்டிருக்கிற என் சிற்றப்பனை

விஷங்கொடுத்துக் கொன்று அஜீரணத்தாலிறந்தானென்று பிரசித்தி செய்யும்படி மந்திரிமார்களோடு ஆலோசித்திருக்கிறது. புண்டர தேசத்தை எதிர்க்கும்படி என் தம்பியான விசாலவர்மாவுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன். பாஞ்சாலிகன் என்கிற பட்டணத்துத் தலைவனும் ஸார்த்தவாஹன் என்பவனும் கனதி என்கிறது லுஷ்கன் கொஞ்சம்பூமிகொடுத்தால் விலையுயர்ந்த வச்சிரமொன்றுகொடுத்துவிடுவதாயிருக்கிறானென்று சொல்லி ஆலோசனைசெய்தார்கள்' என்று இப்படி இன்னும் தனக்குள்ள ரகசியங்களையெல்லாம் வெளியிட்டுச்சொன்னான். அவைகளைக் கேட்டுக்கொண்டவுடனே நான், உனக்கு ஜீவகாலம் இவ்வளவுதான் என்று கையிலிருந்த கத்தியால் அவன் தேஹத்தைச் சேதித்து அந்த அக்கினியில் ஓமஞ்செய்துவிட்டேன். அவன் வெந்துபோயினான். அப்போது பெண்தன்மையால் கொஞ்சம் கலங்கியிருந்த அப்பெண்மணியைச் சமாதானப்படுத்தி அவள் கையைப்பிடித்துக்கொண்டு அரசன் அரண்மனைக்குச்சென்று அங்குள்ள விசேஷங்கள் யாவும் அவளைக்கொண்டு அறிந்துகொண்டு முழுதும் பார்த்துவிட்டு அன்றிரவு அவ்வந்தப்புரத்திலேயே படுத்திருந்தேன்.

## சமாசாரம்.

**பார்லிமேந்து சபை.**—தற்காலத்தில் உள்ள பார்லிமெந்து சபை கூடிய மூன்றாம் தவணை சென்ற ஆகஸ்டு௴ 15௳ ராஜ கமிஷனர்களால் கலைந்துபோக விளம்பரம் பிறந்தது. இரண்டு மணிக்குப்பின் மேற்படி கமிஷனர்கள் சிங்காதனத்திற்குச் சற்று முற்பட ஆசனங்கொண்டு, ஜனப்பிரதிநிதிகள் சபையை வரவழைப்பித்து, மஹாராஜாத்தியவர்கள் எழுதி அனுப்பிய பிரசங்கத்தை லார்ட்சான்ஸெலர் எனும் சிரேஷ்ட நீதியதிபர் வாசித்தார். அதன் உட்பொருளில் நமது தேசத்தைப்பற்றிய வாக்கியங்களாவன:—

இளவரசராகிய நமது அரியகுமாரன் இந்தியாவில் எங்கும் நாட்படப் பிரயாணஞ்செய்து தேக சௌக்கியம் குன்றாமல் சிந்தாயாத்திரையாகவந்து சேர்ந்ததை நினைந்து கெஞ்சாரத் தெய்வத்திற்கு நன்றிசொல்லுகிறோம். நம் மைந்தர் அத்தேசத்தில் விஜயஞ்செய்ததுபற்றி, அங்குள்ள குடிகள் நம்மீதுள்ள பக்திசிரத்தையை வாக்குமூலமாய் வெளியிட இடம்பெற்றார்கள். அவர்கள்காட்டிய ராஜபக்தியையும் விசுவாசத்தையும் கேட்டு மெத்தவும் உத்தமமென்று வியந்தோம்.

நாம் பெற்ற அதிகாரத்தின்பிரகாரம் விளம்பரஞ்செய்து 'இந்திய சக்கரவர்த்தினி' பட்டம் சூடினோம். இந்து தேசத்தில் நமக்கு வழங்கும்படி இந்த நூதன பட்டத்தைத் தொன்றுதொட்டு வழங்கிய பட்டங்களுடன் வகித்துக்கொள்ளும்பொழுது, நமது இந்திய பிரஜைகளின் சுகத்தைக் குறித்து நமக்கு உள்ள பெருங்காதலை வெளியிடத் திட்டஞ்செய்தோம்.

Printed at the C. K. S. Press.

CAMEL OF TARTAR EMIGRANT

தார்த்தாரிய தேசம்.